# பெறுகை அறிவித்தல்

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## உள்நாட்டு அலுவல்கள் பிரிவு

# பாதுகாப்புச் சேவை வழங்கலுக்காக விலைமனுக்கோரல் - 2025-2026

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள உள்நாட்டு அலுவல்கள் பிரிவு, கொழும்பு மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் அலுவலகம் ஆகிய நிறுவனங்கள் அமைந்துள்ள 'நில மெதுர' நிர்வாகத் தொகுதி, கொழும்பு மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் நிதஹஸ் மந்திர வளவை உள்ளடங்கியதான வகையில் 2025/2026 ஆம் ஆண்டு தொடர்பில் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டு அலுவல்கள் பிரிவினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2025.08.07 ஆம் திகதி தொடக்கம் 2025.08.26 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை மீளளிக்கப்படாத ரூபா 4000.00 கட்டணத்தை பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டு அலுவல்கள் பிரிவின் 16ஆவது மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவு சிறாப்பர் பிரிவுக்கு செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பெயரில் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்த பின் பெறுகைக் கிளையில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பிடப்பட்ட வரம்புக்குள் www.moha.gov.lk இணையதளத்தில் மூலம் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கும் வாய்ப்பு வழங்குநர்களுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது.

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என இரு பிரதிகளில் வெவ்வேறாக முத்திரை இட்டு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை வழங்கலுக்காக விலைமனுக்கோரல் 2025-2026" என்று குறிப்பிட்டு 2025.08.27 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது "நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இல் அமைந்துள்ள பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – உள்நாட்டு அலுவல்கள் பிரிவின் 16ஆவது மாடியில் நிதிப் பிரிவின் பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட்டு விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் 2025.11.26 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். பதிவுத் தபாலில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். (தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.)

கணக்காளர் (பெறுகை)
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
உள்நாட்டு அலுவல்கள் நிதிப் பிரிவு
16ஆவது மாடி,
நில மெதுர,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

விலைமனுக்களை ஏற்பது 2025.08.27 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு முடிவுற்ற உடன் "நில மெதுர" கட்டிடத்தின் 16 ஆவது மாடியில் அமைந்துள்ள உள்நாட்டு அலுவல்கள் நிதிப் பிரிவில் அதாவது 2025.08.27 ஆம் திகதி பி.ப. 02.15 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் எழுத்துமூல அதிகாரம் பெற்ற ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் - 011-2050412

**செயலாளர்,**
**பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – உள்நாட்டு அலுவல்கள் பிரிவு**
**"நில மெதுர",**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹென்பிட்ட,**
**கொழும்பு - 05.**